வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற
வளர்ச்சித் துறை,
தலைமைச்செயலகம்,
சென்னை-9.

**கடித எண்.16340/நவாமே1(1)/2015-85, நாள்:09.03.2022.**

அனுப்புநர்
திரு. ஹிதேஷ்குமார் எஸ் மக்வானா, இ.ஆ.ப.,
அரசு முதன்மைச் செயலாளர்.

பெறுநர்
திரு.M.நடராஜன்,
தலைவர்,
கோவிந்தசாமி நகர் குடியிருப்போர் நலச்சங்கம்,
கோவிந்தசாமி நகர், இளங்கோ தெரு பகுதிவாழ் மக்கள்,
கோவிந்தசாமி நகர், R.A புரம்,
சென்னை-28

அய்யா,

பொருள்: தமிழ்நாடு நகர்ப்புர வாழ்விட மேம்பாட்டு வாரியம் - சென்னை R.A புரம், கோவிந்தசாமிநகர் இளங்கோ நகரில் உள்ள ஆக்கிரமிப்புகளை அகற்ற கோரி உச்சநீதிமன்றத்தில் தொடுக்கப்பட்ட அவமதிப்பு வழக்கு எண்.844-846/2015-ஐ தள்ளுபடி செய்ய நடவடிக்கை எடுக்க கோருதல் மற்றும் அங்கு குடியிருப்போரின் வாழ்வாதார உரிமையை காப்பாற்றித் தருமாறும் கோரியது தொடர்பாக - உரிய உதவிகள் புரிய அரசுக்கு ஒத்துழைப்பு வழங்கக் கோருதல் - குறித்து.

பார்வை: தாங்கள் தலைமைச் செயலாளருக்கு அளித்த நாளிடப்படாத மனு.

======

பார்வையில் காணும் தங்களது மனுவில் கோவிந்தசாமிநகர், இளங்கோ தெரு பகுதிவாழ் மக்கள் இளங்கோ தெருவில் தாங்கள் குடியிருந்துவரும் 40 அடி சாலைக்கு எதிர்புறமுள்ள பகுதி குடிசை மாற்று வாரிய சட்டம் 1971ன்படி அறிவிக்கப்பட்ட குடிசை பகுதி என்பதாலும், உச்சநீதிமன்ற வழக்கு எண் WP/468/2014ன் அனுமதியுடன் தொடரப்பட்ட சென்னை உயர்நீதிமன்ற வழக்கு எண். WP/22662/2015 மற்றும் WP/3224/2019ல் சென்னை உயர்நீதிமன்ற தலைமை நீதிபதி அமர்வு பிறப்பித்துள்ள உத்தரவின்படியும், சென்னை நதிகள் மறுசீரமைப்பு அறக்கட்டளை (CRRT) பக்கிங்காம் கால்வாய் மேம்பாடு குறித்து சமர்ப்பித்துள்ள அறிக்கையின் அடிப்படையில் De-notify செய்ய இயலாத காரணத்தால், அரசு புதிய முடிவு எடுத்து தங்களின் குடியிருப்புகளை வரன்முறை செய்யுமாறும், உச்சநீதிமன்ற அவமதிப்பு வழக்கு எண் 844-846/2015-ஐ தள்ளுபடி செய்ய உச்சநீதிமன்றத்தில் நடவடிக்கை எடுக்கவும், தனிநபர் தொடுத்துள்ள வழக்கில் இருந்து தங்களை விடுவித்து, நீண்டகால வாழ்வாதார உரிமையை காப்பாற்றித் தருமாறு கோரப்பட்டுள்ளது.

2. மனுவில் காணும் தங்களது கோரிக்கை கவனமுடன் அரசால் பரிசீலனை செய்யப்பட்டது. அதன் அடிப்படையில் பின்வரும் விவரங்களை தங்களின் மேலான கவனத்திற்கு கொண்டுவர விழைகிறேன்:-

i. சென்னை, ராஜா அண்ணாமலைபுரம், இளங்கோ தெருவில் அமைந்துள்ள குடியிருப்புகள் பொதுப்பணித் துறைக்கு சொந்தமான பக்கிங்காம் கால்வாய்ப் பகுதியை ஒட்டி அமைந்துள்ள நிலையில் அந்த ஆக்கிரமிப்புகளை அகற்றக்கோரி தொடுக்கப்பட்ட பல்வேறு வழக்குகளில் மற்றும் அதனை எதிர்த்து அங்கு குடியிருப்போரால் தொடரப்பட்ட வழக்குகள்/ மேல் முறையீடு/ மறுசீராய்வு மனுக்கள் ஆகியவற்றில் உயர்நீதிமன்றம் பல்வேறு கால கட்டங்களில் அங்குள்ள ஆக்கிரமிப்புகள் அகற்றப்படவேண்டும் என ஆணையிட்டுள்ளது.

ii. மேலும், இது தொடர்பாக அப்பகுதிமக்களால் உச்சநீதிமன்றத்தில் தொடரப்பட்ட வழக்கிலும் அவ்வாக்கிரமிப்புகள் அகற்றப்பட்டு அவர்களுக்கு மாற்று இடங்களில் குடியிருப்புகள் ஒதுக்கீடு செய்யப்பட வேண்டும் என உச்சநீதிமன்றம் ஆணையிட்டுள்ளது.

iii. இந்நிலையில் திரு.செல்வம் மற்றும் பிறரால் உயர்நீதிமன்ற ஆணையை எதிர்த்து உச்சநீதிமன்றத்தில் தொடுக்கப்பட்ட சிறப்பு உரிமையியல் மனு எண் (SLP Civil) 25401 மற்றும் 25403/2009-இல் வழங்கப்பட்ட தீர்ப்பினை அமல் படுத்தக்கோரி திருராஜிவ் ராய் என்பவர் உச்சநீதிமன்றத்தில் அவமதிப்பு வழக்கு (நீதிமன்ற அவமதிப்பு மனு எண்.844-846/2015) தொடந்துள்ளார். இவ்வழக்கு அவ்வப்பொழுது உச்சநீதிமன்றத்தில் விசாரணைக்கு வரும் சமயங்களில் அரசால் நிலையறிக்கை தாக்கல் செய்யப்படுவதுடன் நீதிமன்றம் ஆக்கிரமிப்புகளை அகற்ற உரிய நடவடிக்கை எடுக்க கோரிய நிலையிலும் அதற்காக அரசால் பல்வேறு சமயங்களில் காலநீட்டிப்பும் கோரப்பட்டுள்ளது. மேலும், இவ்வாக்கிரமிப்புகளை அகற்றுவதற்கு எதிராக எந்த நீதிமன்றத்தாலும் தடையுத்தரவு பிறப்பிக்கப்படவில்லை.

3. இப்பிரச்சனையை முடிவுக்கு கொண்டுவர 26.11.2021 அன்று ஆக்கிரமிப்பாளர்களுடன் சம்பந்தப்பட்ட துறை அதிகாரிகள் நடத்திய கூட்டத்திலும் எவ்வித சமரசமும் ஏற்படவில்லை. மாறாக ஆக்கிரமிக்கப்பட்ட இடம் அரசால் குடிசைப்பதியாக அறிவிக்கப்பட்டுள்ளதால் அதனை ரத்து செய்து அறிவிக்கை வெளியிடப்படவேண்டும் என சில ஆக்கிரமிப்பாளர்கள் வலியுறுத்தினர். அவர்களது இக்கோரிக்கை ஏற்கெனவே அரசால் பரிசீலிக்கப்பட்டதில் தமிழ்நாடு குடிசைப் பகுதி (மேம்பாடு மற்றும் அகற்றுதல்) சட்டம் 1971-இன் பிரிவு 3(1)-இன் கீழ் குடிசைப்பகுதியாக அறிவிக்கை செய்யப்பட்ட பகுதிகளை De-notify செய்ய சட்டத்தில் வழிவகை இல்லை என தங்களுக்கு தெரிவித்துக் கொள்ளப்படுகிறது. எனினும் பல்வேறு நிகழ்வுகளில் நிலவுடமை துறைகளால் இதுபோன்ற அறிவிக்கைகள் ரத்து செய்யப்படாமலேயே தமிழ்நாடு நகர்ப்புர வாழ்விட மேம்பாட்டு வாரியத்தால் மறுகுடியமர்வு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு பாதிக்கப்பட்டவர்களின் வாழ்வாதார உரிமை பாதுகாக்கப்பட்டுள்ளது. மேலும், தாங்கள் தற்போது வசித்துவரும் இடத்திற்கு எவ்வித கட்டட மற்றும் திட்ட அனுமதியும் பெறப்படவில்லை. மேலும், குறிப்பிட்ட இடம் பொதுப்பணித்துறைக்கு (நீர்வளத் துறை) சொந்தமான இடமாகும். பல்வேறு வழக்குகளில் சென்னை உயர்நீதிமன்றம் நீர்நிலை ஆக்கிரமிப்புகளை உடனடியாக அகற்றுமாறு அரசுக்கு ஆணையிட்டுள்ளது.

4. எனினும், கோவிந்தசாமி நகர், இளங்கோ தெரு பகுதி மக்களாகிய தாங்கள் நீண்ட காலமாக பக்கிங்காம் கால்வாய் ஒட்டியுள்ள பகுதியில் குடும்பமாக வசித்துவந்த நிலையில் தங்களின் வாழ்வாதார உரிமைகள் பாதிக்கப்படுவதையோ அல்லது பறிபோவதையோ அரசு விரும்பவில்லை. அதே வேளையில் உச்சநீதிமன்றத்தின் உத்தரவை செயல்படுத்த வேண்டிய பொறுப்பும், கடமையும் அரசுக்கு உள்ளது. எனவே, சட்ட விதிகளுக்குட்பட்டு தங்களின் வாழ்வாதார உரிமைகள் பாதிக்கப்படாத வண்ணம் சென்னையில், தமிழ்நாடு நகர்ப்புர வாழ்விட மேம்பாட்டு வாரியத்தால் கட்டப்பட்டுள்ள குடியிருப்புகளில் தங்களை குடியமர்த்த அரசு தயார் நிலையில் உள்ளது.

5. எனவே, இதுகுறித்த தங்களது கோரிக்கைகளை கைவிட்டு இவ்வாக்கிரமிப்புகளை எந்த பிரச்சனைகளுமின்றி அப்புறப்படுத்துவதற்கு அரசுக்கு உரிய ஆதரவினை வழங்குமாறு தங்களை கேட்டுக்கொள்ளப் பணிக்கப்பட்டுள்ளேன். மேலும், இப்பகுதி மக்களுக்கு அனைத்து உதவிகளை புரிவதற்கு தொடர்புடைய அனைத்து அரசு துறைகளும் தயாராக உள்ளன என்பதையும், தங்களின் வாழ்வாதார உரிமைகளை மீட்டெடுக்க அரசு உறுதி பூண்டுள்ளது என்பதையும் தெரிவித்துக்கொள்ளப் பணிக்கப்பட்டுளேன்

தங்கள் உண்மையுள்ள,

9/3/22

அரசு முதன்மைச் செயலாளருக்காக.